**<u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை</u>**

**<u>OS.NO.105/2017</u>** **தேதி.21.**01.2026

**இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. பிரியா என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... பி.சா.2 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10 வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2026 ம் ஆண்டு 20.01.2026 ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.**

| | | |
|---|---|---|
| **பெயர்** | | **திரு.தயாநிதி** |
| **த/பெ.** | | **திரு.ஜோதிலிங்கம்** |
| **வயது** | | **63/2026** |

துவக்க நேரம் 3.00 P.M

சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–

1. எனக்கு இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. கருநாநிதி எனக்கு என்ன உறவுமுறை என்றால் அண்ணன் முறை. கருநாநிதியுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர்கள் என்றால் 4 பேர்கள் முறையே 1.குமரவேல், 2.மதியழகன், 3.கருணாநிதி, 4,ஜோதி ஆவார்கள். கலைவாணி மேற்படி 4 நபர்களின் சகோதரி என்றால் இல்லை.

2. இந்த வழக்கில் யார், யாரை சேர்த்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும், 1.குமார், 2.ஜோதி, 3.மதியழகன் ஆகிய மூவர் மீதும் வழக்கு தாக்கல்

செய்யப்பட்டுள்ளது. வழக்கு தரப்பினர்களின் பூர்வீகம் எது என்றால் சரியாக தெரியவில்லை, ஆனால் அது ஒரு கிராமம். கருணாநிதி குடும்பத்தை தவிர எனக்கு மற்ற வழக்கு தரப்பினர்களின் குடும்பத்தோடு தொடர்பில்லை என்றால் சரியல்ல, குமாரின் மகன் திருமணத்திற்கு சென்றுள்ளேன். பங்காளி என்ற முறையில் குமாரின் மகன் திருமணத்திற்கு சென்றேன் என்றால் ஆமாம். திருமணத்திற்கு அழைத்தார் அதனால் சென்றேன்.

3. நான் என் வேலை செய்கிறேன் என்றால் சித்தூரில், தபால் அலுவலகத்தில் வேலை செய்கிறேன். தற்பொழுது எங்கள் வீட்டில் எனது தகப்பனார் கையெழுத்திட்ட எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான்.

4. எனது தகப்பனார் அவர் உண்டு, அவர் வேலை உண்டு என்று இருப்பார் என்றாலும், வேறு விஷயத்தில் தலையிடமாட்டார் என்றால் ஆமாம், குடும்ப விசேஷங்களுக்கு போவார். குமரவேல், கருணாநிதி, ஜோதி, மதியழகன் ஆகியோர்களுக்கு கிராமத்தில் உள்ள சொத்தை தவிர வேறு சொத்துக்கள் இல்லை என்றால் சரிதான்.

5. என்னிடம் காட்டப்படும் உயில் (பி.வா.சா.ஆ.4)ல் எந்த சூழ்நிலையில், எவ்வாறு எழுதப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். எனது தகப்னார் கையெழுத்து போட்ட வேறு ஆவணத்தை நான் நீதிமன்றத்திற்கு எடுத்துவரவில்லை என்றால் ஆமாம். கருணாநிதி கேட்டுக்கொண்டதின்பேரில் நான் தற்பொழுது சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான்.

6. என்னிடம் காட்டப்படும் உயில் (பி.வா.சா.ஆ.4)ல் கண்டுள்ள கையெழுத்து என்னுடைய தகப்பனார் மற்றும் சித்தப்பாவின் கையெழுத்துக்கள் இல்லை என்றாலும், கருணாநிதி கேட்டுக்கொண்டதின்பேரில் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை:– இல்லை.

முடிவு நேரம் 3.25 P.M

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.